HALLIP BRANCH LIBRARY
MUNICIPAL COUNCIL
JAFFNA

ரெலெக்ஸ்
ரெலிஷோ
சேவையில்
நம்பிக்கையானவர்கள்
நல்லவர்கள் — எல்லவர்கள்
ரெலிகுளோப்!
ஆர். ஜி. கட்டடம்
ஸ்ரான்லி வீதி,
யாழ்நகர்.

Registered as a Newspaper

உதயன்

விலை ரூ.1/-

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

காதுகளுக்கான ஆறுதல்
ரெலிஷோக்கே
ரெலிகுளோப்
இரவு பகல்
24 மணி நேர சேவை
ரெலி: 25088
(6 தொடர்புகள்)
ஆர். ஜி. கட்டடம்,
ஸ்ரான்லி வீதி,
யாழ்நகர்

பிரதேச 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆடி மீ 10 உ செவ்வாய்க்கிழமை ஹிஜிரி 1406 ஷவ்வா பிறை 15 (24 06 1986) UTHAYAN A DAILY TAMIL DAILY கதிர்:- 186

ஜனாதிபதியின் ரஷ்யா விஜயம் திடீரென ரத்து!

காரணம் அறிவிக்கவில்லை

கொழும்பு, ஜூன் 24

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் ரஷ்ய விஜயம் திடீரென ரத்துச் செய்யப்பட்டது. அதற்கான காரணம் எதுவும் அறிவிக்கப்படவில்லை.

நாளை (25 ஆம் திகதி) சர்வகட்சி மாநாடு ஆரம்பமானதும், இம்மாதம் 28 ஆம் திகதி திரு ஜெயவர்த்தனு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு ரஷ்யா செல்வதற்கு ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது.

ஜனாதிபதியான பின்னர் ரஷ்யாவிற்கு திரு. ஜெயவர்த்தனு மேற்கொள்ளவிருந்த முதலாவது உத்தியோகபூர்வ விஜயம் இது என்று சொல்லப்படட்டது.

இந்த விஜயத்தின்போது திரு ஜெயவர்த்தனு 12 தினங்கள் ரஷ்யாவில் சுற்றுப் பயணம் செய்யத் திட்டமிட்டு இருந்தார்.

ரஷ்ய விஜயம் ரத்தானதற்குக் காரணங்கள் தெரிவிக்கப்படவில்லை.

ரஷ்ய விஜயத்திற்கான புதிய திகதி இரண்டு அரசாங்கங்களும் கலந்து பேசிய பின்னர் அறிவிக்கப்படும் என்று கொழும்பு அரசு வட்டாரங்கள் கூறின

ஜனாதிபதியின் ரஷ்ய விஜயம்பற்றி திடீரென அறிவிக்கப்பட்டதன்பின்னர்,

இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. பி. சிவ் சங்கர் திடுதிப்பென ரஷ்ய விஜயம் ஒன்றை மேற்கொண்டார் என்பதும் –

ரஷ்ய அதிபர் கோர்பச்சேவ்வுடன் இரகசியப் பேச்சுவார்த்தை நடத்தினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(உ-எ- 21-1)

யாழ் வந்த லொறி கடத்தப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த தனியார் லொறி ஒன்று கிளிநொச்சிக்கு அண்மித்த பகுதியில் வைத்து நேற்று இனந் தெரியாதோரால் கடத்தி செல்லப்பட்டது

வெளிநாட்டில் இருந்து வந்த பல பொதிகள் உட்பட பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் அப்போதுலொறியில் இருந்தன.

இந்த லொறிகளின் பின்னால் மேலும் இரண்டு லொறிகள் வந்ததாகவும் அவை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(உ-10)

காலையில் சந்திப்பு மாலையில் மாநாடு

கொழும்பு, ஜூன் 24

நாளை மாலை சர்வ கட்சி மாநாடு ஆரம்பமாவதற்குமுன்னர் காலையில் ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனு சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தூதுக்குழுவைச் சந்தித்துப் பேசுவார்.

ஜனாதிபதியைச் சந்தித்துப்பேச சுதந்திரக் கட்சி முன்னர் தீர்மானித்து இருந்தது.

அதற்கு இணங்கவே ஜனாதிபதி, புதன் காலை சுதந்திரக் கட்சிக் குழுவைச் சந்திப்பார்.

பெரும்பாலும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவே சுதந்திரக் கட்சிக் குழுவுக்குத் தலைமை வகிக்கலாம் என்று தெரிகிறது.

வியாழக்கிழமை சுதந்திரக் கட்சி கொழும்பில் பொதுக் கூட்டம் ஒன்றை நடத்தத் தீர்மானித்து உள்ளது.

(உ-எ-2)

பரந்தன் பகுதியில் ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூன் 24

கிளிநொச்சி, பரந்தன் பகுதிகளில் கடந்த ஞாயிறுக்கிழமை 'ஷெல்' தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன

இதனால் காயமடைந்த பெரியசாமி சிவசுப்பிரமணியம் (15வயது) என்ற சிறுவன் யாழ் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளான்

இவருக்கு கையிலும் இடுப்பிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

மேலும் பலர் காயமடைந்திருப்பதாகவும் பல கட்டடங்கள் சேதமடைந்திருப்பதாகவும் அறியவருகிறது

(உ-10)

2 சடலங்கள் அழுகிய நிலையில் கடலில் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 24

குருநகருக்கு அப்பால் கடலில் கல்முனை கோழியடி என்ற திருமணல் பிட்டியில் அடையாளம் காணப்படாமல் சிதைந்த நிலையில் நேற்றுக் காலை கண்டு பிடிக்கப்பட்ட இரண்டு சடலங்களும் அந்த இடத்திலேயே தகனம் செய்யப்பட்டன

இந்தச் சடலங்கள் குறித்து குருநகர் கடற்றொழிலாளர் சங்கத் திற்கு முதலில் தகவல் கிடைத்தது.

இதனையடுத்து அந்தச் சடலங்களை மீட்டுவர குருநகர் கடற்றொழிலாளர் சங்க உறுப்பினர்கள் படகு மூலம் அந்த இடத்திற்குச்சென்றனர்.

எனினும் சடலங்கள் இரண்டும் அழுகிய நிலையிலும் தலைமயிர்கள் உதிர்ந்த நிலையிலும் காணப்பட்டனவாம்

சடலங்களை மீட்டுவர முடியாததன் காரணமாக சடலங்கள் ஒதுங்கியிருந்த கல்முனை மணற்பிட்டியிலேயே தீமூட்டி

(4 ஆம் பக்கம் பார்க்க)

நாவற்குழியில் மோதல்

போராளிகள் இருமுனைத் தாக்குதல்

சிப்பாய்கள் பலர் பலி?

கைதடி, ஜூன் 24

நாவற்குழி இராணுவ முகாமில் இருந்து நேற்றுக் காலை 10 மணியளவில் வெளியே வந்த சிப்பாய்கள் மீது இரட்டைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இந்த இரு தாக்குதல்களில் பத்துக்கும் அதிகமான சிப்பாய்கள் கொல்லப்பட்டதாகத் தெரிய வருகிறது.

சுமார் நூறு சிப்பாய்கள் முகாமைவிட்டு வெளியே வந்தனர். முதலில் அவர்களை நோக்கி தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் சில சிப்பாய்கள் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

சிப்பாய்களுக்கு எதிராக மோட்டார் ஷெல் தாக்குதல்களும், துப்பாக்கிப் பிரயோகங்களும் மேற்கொள்ளப்பட்டன.

முகாமைவிட்டு முன்னேறிய சிப்பாய்கள் போராளிகளின் தாக்குதலை அடுத்து மரணம் அல்லது காயமடைந்தவர்களைத் தூக்கிக்கொண்டு முகாமிற்குச் சென்றதாகவும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 24

நேற்று நடைபெற்ற நாவற்குழி தாக்குதல் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையின் விவரம் வருமாறு:-

நேற்றுக் காலை பதினொரு மணியளவில் நாவற்குழி இராணுவ முகாமில் இருந்து கால் நடையாக புறப்பட்ட 125 இராணுவத்தினர் கைதடிச் சந்தியை அண்மித்தபோது எமது வீரர்கள் நேரடி மோதலில் ஈடுபட்டனர்.

இத் தாக்குதலின் போது சில இராணுவத் தினர் கொல்லப்பட்டனர்.

இவர்களில் ஒருவரின் பெயர் சுமணபால.

எமது தரப்பில் எது வித இழப்புகளும் ஏற்படவில்லை. பின் வாங்கிய இராணுவம் மீண்டும் முகாம் திரும்பியது.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-10)

ஈ. பி. ஆர். எல். எவ் விடுத்த அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 24

நேற்றுக்காலை நாவற்குழியில் நிகழ்ந்த தாக்குதல் குறித்து ஈ. பி. ஆர். எல். எவ் இயக்கம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இம் மாதம் 19 ஆம் 20 ஆம் திகதிகளில் ஹெலிகொப்டர் மூலம் கொண்டு வந்து நாவற்குழி முகாமில் குவிக்கப்பட்ட சீறுப்புச் சட்டைக்காரர்களும் சிப்பாய்களும் சேர்ந்து தமது மனித வேட்டையை தொடரும் நோக்கில் எமது பிரதேசத்திற்குள் நூற்றுக்கணக்கில்நேற்றுவெளியே வந்தனர்.

இவர்களை எமது பிரதேசத்திற்குள் மேலும் முன்னேற விடாது மக்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

லயனல் நியமனம்

கொழும்பு, ஜூன் 24

முன்னாள் யாழ் அரச அதிபர் திரு. லயனல் பொன்னம்பேரு சிவில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் கீழ் இந்தப் புதிய அமைச்சு வருகின்றது.

குண்டு வெடிப்புச் சம்பவங்களைத் தடுக்கும் பொறுப்பு, அது சம்பந்தமாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது ஆகிய பொறுப்புக்கள் புதிய அமைச்சிடம் வழங்கப்பட்டுள்ளன.

(உ-எ)

மன்னாரில் ரோந்து அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 24

கடந்த மூன்று நாட்களாக மன்னார் மாவட்டத்தில் சிப்பாய்களின் ரோந்து அதிகரித்துள்ளது.

மன்னார் இராணுவ முகாமில் இருந்து புறப்படும் சிப்பாய்கள் நாள் முழுவதும் பல வீதிகளிலும் சென்று சோதனை நடத்துவதாகக் கூறப்படுகிறது.

இதனால் மக்கள் பீதியடைந்துள்ளனர்.

வெளியில்நடமாடுவதை மக்கள் தவிர்த்துக் கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முகாமில் இருந்து புறப்படும் சிப்பாய்கள் கவசவாகனங்களை மட்டும் வீதியில் செல்ல விட்டு வீதிக்கு இருமருங்கிலும் உள்ள காடுகள், பற்றைகள், வீடுகள், தோட்டங்கள் ஆகியவை ஊடாக நடைபவனியாக செல்வதாகக் கூறப்படுகிறது.

அத்தோடு மன்னார் கடல் பகுதியில் கடற்படையினர் ரோந்துச் சேவையும் அதிகரிக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

(உ-10)

தமிழருக்கு ஆதரவாக பம்பாயில் மாநாடு

பம்பாய், ஜூன் 24

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு சர்வதேச ஆதரவைத் திரட்டும் மாநாடு ஒன்று நேற்றுத் திங்கட்கிழமை (23 ஆம் திகதி) பம்பாய் சண்முகானந்த சபாவில் ஆரம்பமானது.

பம்பாய் தமிழர் பாதுகாப்புப் பேரவை, ஈழத் தமிழர் நட்புறவு அரங்கு இம்மாநாட்டை நடத்துகின்றது.

இம்மாநாட்டில் சகல தமிழ் விடுதலை அமைப்புக்களும் கலந்து கொள்கின்றன.

இந்திய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் மாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் திரு அ. அமிர்தலிங்கம் துணைவியாருடன் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஞாயிறு பம்பாய் போய்ச் சேர்ந்தார்.

(உ-எ 3)

முச்சந்திமுரளி

காலையில் சந்திப்பும், மாலையில் மாநாடும் என்டால், உது என்ன ஒளிச்சுவிளையாடுகினமே...? உந்த சயதகளிலையுங் சின்னப்பிள்ளையள் மாதிரி நினைப்போ...!

தொலைபேசி சேவை சிரடைந்தது

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ்நகரிலிருந்து கொழும்பு தவிர்ந்த பிற இடங்களுக்கான நேரடிதொலைபேசிச் சேவை நேற்று மாலை முதல் சிரடைந்தது

மன்னார், வவுனியா, திருகோணமலை உட்பட பல இடங்களுக்கும் தொலைபேசி அழைப்புக்களை எடுக்க முடிந்தது.

(உ)

திருமலையில் இன்று முக்கிய மாநாடு

அரச அதிபர் நடத்துகிறார்

திருகோணமலை ஜூன்24

திருகோணமலையில் மக்கள் மத்தியில் பயம், பீதியைப் போக்கி சமூக நிலையை ஏற்படுத்து முகமாக இன்று செவ்வாய் பிற்பகல் திருகோணமலைக் கச்சேரியில் மாநாடு ஒன்று நடைபெற வுள்ளது.

இந்த மாநாட்டை அரசாங்க அதிபர் திரு டி. எம். ஆரியரத்ன கூட்டியிருக்கின்றார்.

பிரஜைகள் குழுக்கள், சமய நிறுவனங்கள், சமயக் குருமார்கள், வர்த்தகர்கள், சமூகத் தலைவர்கள் ஆசிரியர்கள் அதிகாரிகள் ஆகியோரை இந்த மாநாட்டில் கலந்துகொள்ளும்படி அரசாங்க அதிபர் அழைத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

நிபந்தனை இன்றி எம்மை அங்கீகரிக்க இந்தியா வேண்டும்

ஈரோஸ் பிரமுகர் சொல்கிறார்

சென்னை, ஜூன் 23

சர்வதேச விடுதலை இயக்கங்களுக்கு அளித்த அங்கீகாரத்தை, எமக்கும் எந்தவித நிபந்தனையும் இன்றி அளிப்பதே இந்தியா இன்றைய நிலையில் செய்யக் கூடிய மிகப் பெரிய உதவி

இப்படி ஈழப்புரட்சி அமைப்பைச் சேர்ந்த பிரமுகர் திரு பாலகுமார் 'பாலம்' என்ற இந்திய தமிழ்ச் சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

திரு. பாலகுமார் பேட்டியில் மேலும் கூறியிருப்பதாவது;

அரசின் பொருளாதார பலத்தை நொறுக்குவதன் மூலமே அதன் இராணுவ பலத்தை அழிக்க முடியும். சிங்கள அரசை பல முனைகளிலும் தாக்கி செயலிழக்கச் செய்வதன் மூலமே இராணுவ ஒடுக்கு முறையைக் குறைக்க முடியும்.

இலங்கை அரசு தனது இராணுவ வல்லாண்மையைப் பயன் படுத்தி, தமிழ் பேசும் மக்களை அடிமை நிலையில்—தரகர்கள் தரும் சலுகைகளை பேச்சின்றி பெற்று வாழும் வெறும் சோற்றுப் பிண்டங்களாக—வைத்திருக்க முயல்கிறது

எமது சுயகௌரவத்

((4-ம் பக்கம் பார்க்க)

செயலாளருக்கு தலைவர் தந்தி

யாழ்ப்பாணம், ஜூன் 24

நாளை நடைபெறும் சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டாம் என்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலத்துக்கு அவசரத் தந்தி அனுப்பப்பட்டுள்ளது.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் சட்டத்தரணி எஸ் ஆர். கனகநாயகம் இந்த அவசரத் தந்தியை அனுப்பி வைத்துள்ளார்.

தந்தியின் வாசகம் வருமாறு;

ஜூன் 25 இல் நடைபெறும் சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொள்ள உங்களின் கொழும்புக் கிளை, காங்கிரஸின் தாய் அமைப்புடன் ஆலோசிக்காமல் முடிவெடுத்துள்ளது.

இது பெரும் கவலையைத் தருகின்றது.

தமிழ்ச் சமூகத்தின் அபிப்பிராயம், கட்சி உறுப்பினர்களின் அபிப்பிராயம், கட்சியின் சட்டதிட்டம் ஆகியவற்றிற்கே

(4ஆம் பக்கம் பார்க்க)

ரி. பி. ராஜினாமா

கொழும்பு, ஜூன் 24

இலங்கை மக்கள் கட்சித் தலைவர் பதவியில் இருந்தும் உறுப்பினர் பதவியில் இருந்தும் திரு. ரி. பி இலங்கரத்தினா ராஜினாமாச் செய்து விட்டார்.

ராஜினாமாக் கடிதத்தை நேற்று அவர் கட்சிப் பொதுச் செயலாளர் திரு விஜயகுமாரணதுங்க விலாசத்திற்கு அனுப்பிவைத்தார்.

(எ-1-21)

புனித இயக்கங்களுக்கு மிகவும் பணிவான
வேண்டுகோள்

எனது ஸ்தாபனத்திற்கு பணியைச் சேர்ந்த தருமலிங்கம் என்பவரின் 26ஸ்ரீ 6305 இலக்கநம்பர்லொறியில் கொழும்பில் இருந்து யாழ்நகருக்கு ஏற்றி வந்த பொருட்களான கைக்கோ, சஸ்ட், சவர்க்காரம், டீப்பெட்டி, மீன்ரின் ஆகிய பொருட்களுடன் கடந்த 14-6-86 ல் வில்வமடு றெட்பானவுக்கு அருகாமையில் இனந் தெரியாதவர்களினால் கடத்தப்பட்டது.

இப்பொருட்கள் அத்தியாவசிய பொருட்களாக இருப்பதால் பொதுமக்களின் நலன்கருதி புனித இயக்கங்கள் தலையிட்டு இவற்றை மீட்டுத்தந்து உதவுமாறு மிகப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு
எஸ். வி. முருகேசு
154, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சுபநேரம்
24 6 1986
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:-
10 25 முதல் 11 55வரை
ராகுகாலம்:-
2 55 முதல் 4.25 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வடமராட்சியில் நடமாடும் ஆஸ்பத்திரி

அவசரதேவை உணர்ந்து ஏற்பாடு

பருத்தித்துறை, ஜூன் 24
வடமராட்சிப் பகுதியில் நடமாடும் ஆஸ்பத்திரி அமைக்கப்படவுள்ளது

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை டாக்டர்களின் ஒத்துழைப்புடன் இந்தப் புதியசேவை இயங்கும்.

வடபகுதியில் தற்போது நிலவும் அசாதாரண குழ்நிலையில் - மக்கள் அடிக்கடி ஆபத்தானநிலையில் மருத்துவ உதவிவேண்டி நிற்பதால் —இப்புதிய சேவையின் அவசியம் உணரப்பட்டு அது ஆரம்பிக்கப்படுகிறது.

இதற்கென ஒரு இடம் ரூபா 6 றுமதியான ஒரு பெரிய மினிபஸ் வண்டியை ஒரு அன்பர் அன்பளிப்புச் செய்துள்ளார். இதனை சுகாதார சேவைகள் திணைக்களம் அம்புலன்ஸ் வண்டியாக மாற்றி அமைத்துக் கொடுக்க இணங்கியுள்ளது.

இந்தநடமாடும் வைத்தியசாலைப் பிரிவில் குளிர்சாதனப்பெட்டி, இரத்த வங்கி, அவசர சிகிச்சைக்கான மருந்து வகைகள் யாவும் வைக்கப்பட்டிருக்கும்.

பொதுமக்கள்மீது தாக்குதல் நிகழும் வேளைகளில் அந்த இடங்களுக்கு உடனடியாகச் சென்று அவசர முதலுதவி சிகிச்சைகளை இந்த நடமாடும் சேவை அளிப்பது வழங்கும்

இதேவேளை ஒருநேர அட்டவணைப் பிரகாரம் பல பகுதிகளுக்கும் சென்று இலவச மருத்துவ சேவைகளை வழங்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இப்புதிய சேவையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை டாக்டர்கள்; தாதிகள், மருத்துவ மாதுக்கள், ஆரம்ப சுகாதாரநிலையத் தொண்டர்கள் ஆகியோர் கலந்துகொண்டு இலவச சேவையாற்ற முன்வந்துள்ளார்கள்.

இந்நடமாடும் வைத்தியசாலைக்குரிய மருந்து வகைகளைக் கொள்வனவு செய்ய பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் ரூபா 30 ஆயிரத்தை அன்பளிப்புச் செய்துள்ளது மேலும் 70 ஆயிரம்ரூபா நிதி சேகரிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது (உ-118)

சிங்களவர் வெளியேற விடுத்த எச்சரிக்கை வெறும் வதந்தியாம்

கொழும்பு, ஜூன் 24
மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வரும் தெஹியத்தகண்டியாப் பகுதியில் உள்ள சிங்களக் குடியானவர்களை வெளியேறும்படி தீவிரவாதிகள் எச்சரித்துள்ளார்கள் என்று கூறப்படுவது வெறும் வதந்தி

—இம்படி காணி அமைச்சர் காமினி திஸாநாயக்கா அப்பகுதியில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் சொன்னார்.

சிங்களத்தில் எழுதப்பட்டுக் கிடைக்கப்பெற்ற இந்த எச்சரிக்கைக் கடிதங்கள் தீவிரவாதிகள் அனுப்பியவை அல்ல. சில சிங்களவர்கள் தங்கள் அரசியல் லாபம் கருதிச் செய்த வேலையே இது.

எனவே குடியானவர்கள் வீடுகளை விட்டு வெளியேறக்கூடாது -

இப்படிச் சொன்னார் அமைச்சர் திஸாநாயக்கா (உ-ஏ)

சீனன் வாடியில் இளைஞர் பலி இருவர் கடத்தல்

கொழும்பு, ஜூன் 24
திருகோணமலை மாவட்டத்தில் சீனன் வாடி ராயில் நிலையத்தைச் சேர்ந்த ஒரு தொழிலாளி துப்பாக்கிச் சூடுபட்டு மரணமானார்.

இன்னும் இரண்டு தொழிலாளர்கள் ஆயுதம் தாங்கிய தீவிரவாதிகளினால் கடத்திச் செல்லப்பட்டு விட்டனர்.

இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. தம்பலகாமத்துக்கும் சீனன் வாடிக்கும் இடையே தண்டவாளத்திருத்த வேலைகளில் இவர்கள் ஈடுபட்டிருந்த சமயமே தீவிரவாதிகள் தாக்கினராம்.

இப்படி பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (இ-எ)

மிகக்கடும் தண்டனை

மட்டக்களப்பு, ஜூன் 23
மட்டக்களப்பு, களுவன்கேணிப்பகுதியில் வியாழன் இரவு 20 வயது நிரம்பிய கந்தையா சௌந்தரராசா என்பவருக்கு மிகக்கடும் மரண தண்டனை விதிக்கப்பட்டது (இ-எ-21)

சுந்தரபுரம் மக்களுக்கு சோதனை மேல் சோதனை

காங்கேசன்துறை ஜூன் 24
பலாலி விமான நிலைய விஸ்தரிப்பால் இடம் பெயர்ந்து சுந்தரபுரம் குடியேற்ற திட்டத்தை அமைத்த 200 குடும்பங்களுக்கு சோதனை மேல் சோதனை ஏற்பட்டுள்ளது.

பலாலி விமான நிலைய விஸ்தரிப்பை அடுத்து வசாவிளான் பலாலி பகுதியில் வசித்த 200 மேற்பட்ட குடும்பங்கள் தாம் செய்கை பண்ணிய பயிர்கள், தம் உடைமைகளை விட்டு வெளியேறி சுந்தரபுரம் என்னும் பகுதியில் உள்ள நிலத்தில் குடியேறின.

அங்கு கிணறுகள் வெட்டி, சிறுவீடுகள் அமைத்து விவசாயம் செய்யும் ஆரம்ப நிலையில் அவர்கள் இருந்தனர்.

இதற்கிடையில் வயாவிளான் மத்திய வித்தியாலயத்தில் அமைந்த இராணுவ முகாமில் ஹெலிகப்டர் ரோந்து சுதந்திரபுரம் பகுதியிலும் தற்போது அதிகரித்து வருகிறது

இதனால் பிதிகொண்ட 50 கும் மேற்பட்ட குடும்பங்கள் சுந்தரபுரத்தில் இருந்து வெளியேறி விட்டன என்று தெரிவிக்கப்பட்டது

மேலும் பல குடும்பங்கள் மற்றும் பகுதிகளில் வீடு தேடும் படலத்தில் இறங்கியுள்ளன (இ-68)

கட்டுநாயக்கா விமான நிலையத்தில்

இந்தியப் பயணிகளுக்கு வேண்டுமென்றே தாமதம்

பிரயாணிகள் புகார்

கொழும்பு, ஜூன் 24
கட்டுநாயக்காவில் வந்து இறங்கும் விமானப்பயணிகளில் இந்தியரிகளுக்கான சுங்கப் பரிசோதனை கடைசியாகத் தான் நடத்தப்படுகின்றதாம்.

இப்படி மேலிடத்துக்கு முறையிடப்பட்டுள்ளது.

பல நாடுகளைச்சேர்ந்தவர்கள் விமானங்களில் கட்டுநாயக்கா வந்து இறங்குகின்றனர்.

ஏனையநாட்டுப் பயணிகளுக்கான சுங்கப் பரிசோதனைகள் உடனுக்குடன் நடத்தப்படுகின்றனவாம்

இந்தியப் பயணிகளுக்கான சுங்கப்பரிசோதனை ஆகக் கடைசியாகத் தான் இடம் பெறுகின்றதாம்

இந்தப் பாரபட்ச நடவடிக்கையினால் முந்தி வரும் இந்தியப் பயணிகள் கூடவல்லோரும் நீண்டநேரம் சுங்கப் பரிசோதனைக்காகக் காத்து இருக்க வேண்டியுள்ளதாம். (இ-எ)

இலங்கை இனப்பிரச்சினை

முதலில் காலவரம்பு பின்னர் ராணுவத் தலையீடு

இந்திய அமைப்பு தீர்மானம்

சென்னை, ஜூன் 24
இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண காலவரம்பு விதிக்கும் ராஜதந்திர நடவடிக்கையை இந்தியா மேற்கொள்ள வேண்டும். அந்த நடவடிக்கை தோல்வி காணும் பட்சத்தில் இந்தியா இராணுவரீதியில் தலையிட்டு தமிழரின் உயிர்களைப் பாதுகாக்க வேண்டும்.

இப்படி இந்திய அரசைக் கோரும் தீர்மானம் ஒன்று அகில பாரதிய வித்யார்த்தி பரிஷத்தின் தேசிய செயற்குழுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இந்தூரில் பரிஷத்தின் செயற்குழு அண்மையில் கூடியது.

இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட இன்னொரு தீர்மானம் வருமாறு;

இலங்கை இனப்பிரச்சினையை பிராந்திய அரசியல் பிரச்சினையாக மட்டும் கருதிவிடக்கூடாது. மனித உரிமைகளை மீறும் பிரச்சினையாக இதைக் கருதி இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும்

ஆகவே இந்திய அரசு இலங்கைப் பிரச்சினையை ஐ.நா. அணி சேரா இயக்கம் ஆகிய சர்வதேச அரங்குகளில் எழுப்பவேண்டும்.

இப்படி அத் தீர்மானம் கூறுகிறது.

இலங்கைப் பிரச்சினை குறித்து பொதுசன அபிப்பிராயத்தைத் திரட்டுமுகமாக தேசிய மாநாடு ஒன்றை சென்னையில் ஆகஸ்ட் 10 ஆம் திகதி கூட்டவும் அகில பாரதீய வித்யார்த்தி பரிஷத் முடிவு செய்துள்ளது.

இந்த மாநாட்டில் கலந்துகொள்ளும்படி நாட்டின் அரசியல் கட்சித் தலைவர்கள் அனைவரும் அழைக்கப்படுவர் என்று பரிஷத்தின் தென் பிராந்திய அமைப்புச் செயலாளர் திரு எச். தாத்ரேய சொன்னார். (உ-எ-2)

கல்விக் கோட்பாடுகளை பல்கலைகழகங்கள் தரவேண்டும்

வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம் ஜூன் 24
"ஒரு நாட்டின் கல்வி மேம்பாடு அடைவதற்கு அந்த நாட்டுப் பல்கலைக் கழகங்கள் கல்விக் கோட்பாட்டைத் தத்துவத்தை வழங்குதல் வேண்டும். அதுவே கல்வித் துறையினருக்கு வழிகாட்டியாக அமையும்"

யாழ் பல்கலைக்கழகக் கல்வித்துறைப் பேராசிரியர் ப. சந்திரசேகரம் "கல்வியில் அளவிடும் மதிப்பீடும்" என்ற நூல் வெளியீட்டு விழாவில் சிறப்புரை ஆற்றும் போது இவ்வாறு குறிப்பிட்டார்.

திரு. ப. சந்திரசேகரம் தொடர்ந்து கூறியதாவது—

பல்கலைக்கழகங்கள் கல்வித் தத்துவங்களை வழங்க, கல்வி அமைச்சு கொள்கையாக்கத்தில் ஈடுபடக் கல்விப் பணிப்பகங்கள் அவற்றைச் செயற்படுத்தல் நல்ல ஆரோக்கியமான மரபாகும். இவ்வித ஒருங்கிணைப்பினால் நாட்டிலே கல்வி வளம்பெறும்.

தமிழ் மொழியில் ஆக்க இலக்கிய நூல்களுடன் அறிவு இலக்கிய நூல்களும் வெளிவரல் வேண்டும் கல்வித்துறையில் தமிழ் மொழியில் "கல்வியில் அளவிடும், மதிப்பீடும்" என்ற பொருள் பற்றி ஐந்து நூல்கள் தானும் வெளிவந்திராத நிலையில் இந்நூல் நல்ல பங்களிப்பாகும்"

—இவ்வாறு பேராசிரியர் சந்திரசேகரம் தனதுரையில் தொடர்ந்து கூறினார். நூலாசிரியரான அரிவுரையாளர் வீ. சின்னத்தம்பி பதிலுரை கூறினார்.

துணைவேந்தர் சு. வித்தியானந்தன், பதிவாளர் திரு. வி. சிவராசா யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு ஆர். சுந்தரலிங்கம் ஆகியோரும் உரையாற்றினர் (உ-9)

ஈழத்து நாடகத்துறை வளர்ச்சியில் 'சானா'வின் பங்கு

நினைவு தினக் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், ஜூன் 24
நாடகத்துறையின் வளர்ச்சிப்பாதையில் ஒரு சங்கிலிக் கோர்வையாக இருந்து பணியாற்றிய பெருமைக்குரியவர் அமரர் 'சானா' அவர்கள். ஈழத்தின் தமிழ் நாடக வளர்ச்சிக்கு 'சானா' ஆற்றிய பணி போற்றுவதற்குரியது. புராண நாடகங்கள் தொடக்கம் நவீன நாடகங்கள் வரை அவருடைய முத்திரையைப் பதித்துள்ளன

'சானா' அவர்களின் ஏழாவது நினைவு தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும்போது மேற்கண்டவாறு கலாநிதி சி. மௌனகுரு மேற்கண்டவாறு கூறினார்

இணுவில் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் இணுவில் கலைஇலக்கிய இளைஞர் வட்டத்தின் தலைவர் திரு. துரை-எங்கரக தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

திரு மௌனகுரு மேலும் பேசியதாவது:-

மேடை நாடகவளர்ச்சிக்கு ஒருபுறமும், வானொலி நாடக வளர்ச்சிக்கு மறுபுறமும் பணியாற்றிறவர் 'சானா'.

'அவருடைய 'லண்டன் கந்தையா' - 'அசட்டு வேலைக்காரன்', 'மதிதாப்பு' போன்ற நாடகங்கள் மக்கள் மனதில் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளன.

யாழ்ப்பாணத் தமிழை நாடகங்களில் புகுத்தி நகைச்சுவை கலந்த நாடகங்களை அவர் மேடையேற்றினர்.

இப்படி அவர் கூறினர்.

நடிகமணி வி. வி வைரமுத்து, கலைப்பேரரசு திரு. ஏ. ரி பொன்னுத்துரை, கவிஞர் சா. வே. பஞ்சாட்சரம். கலைஞர் கே எஸ். பாலச்சந்திரன் ஆகியோர் 'சானா' வின் நாடகத்துறை முயற்சிகளையும், அவரோடு தமக்கிருந்த நாடகத் தொடர்புகளையும் விரிவாக எடுத்துக் கூறினர்கள்.

எழுத்தாளர் சிதம்பர செந்திநாதனின் நன்றியுரையுடன் நினைவு தினக் கூட்டம் நிறைவெய்தியது. (இ)

மகாஜனா பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 24
தெல்லிப்பளை, மகாஜனக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் நிறுவியவர் நினைவு நாளும் இன்று காலை 8 30 மணி முதல் கல்லூரியின் பாவலர் துரையப்பா பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. இராசுந்தரலிங்கம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி ஆ வேலுப்பிள்ளை, நிறுவியவர் நினைவுப் பேருரையை நிகழ்த்துவார்

திருமதி சுந்தரலிங்கம் பரிசில்களை வழங்குவார். (இ-ஒ)

லயன்ஸ் கழக சிறந்த செயலாளர்

யாழ்ப்பாணம் ஜூன் 24
கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் செயலாளர் திரு. ச. சண்முகேந்திரன் லயன்ஸ் 306 பி சர்வதேச மாவட்டத்தில் சிறந்த செலாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

சிறந்த செயலாளருக்கான விருது கண்டியில் நடைபெற்ற லயன்ஸ் 306 பி மாவட்ட வருடாந்த மாநாட்டில் வழங்கப்பட்டது.

கோப்பாய் லயன்ஸ் கழகம் வடபகுதியில் சிறந்த லயன்ஸ் கழகமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (இ)

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

அடகு நகைகளை மீட்டனர்

பலாலி, ஜூன் 24
வலிவெட்டித்துறை — யாழ்ப்பாணம் மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைத்து குறிப்பிட்ட திகதிகளில் அவைகளை மீட்கத் தவறிய நகை உரிமையாளர்களுக்கு கடந்த வெள்ளக்கிழமையும் சனிக்கிழமையும் பலாலி முகாமுக்கு அண்மையிலுள்ள மக்கள் வங்கிக்கிளையில் வைத்து நகைகள் வழங்கப்பட்டன.

இம்மாத முற்பகுதியில் அடகு நகைகளை எடுத்துச் சென்றவர்கள் மீது ஹெலிக்கொப்டர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து தற்காலிகமாக நகைவழங்குதல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

வெள்ளிக்கிழமையும், சனிக்கிழமையும் அடகு வைத்தோர் அச்சுவேலிக்கு வந்து, அங்கு மினிபஸ்ஸை ஒழுங்கு செய்தும் — நடையாகவும் சென்று அடகு நகைகளை எடுத்துவந்தனர்

வெள்ளிக்கிழமை வயாவிளாவில் நடைபெற்ற அசம்பாவிதத்தைத் தொடர்ந்து அடகு நகைகளை எடுக்காது திரும்பிச் சென்ற பலர் சனிக்கிழமை அவற்றை எடுத்தனர்.

வலிவெட்டித்துறையைத் தொடர்ந்து ஏனைய கிளைகளில் அடகு வைத்த நகைகளும் பலாலியில் வைத்தே வழங்கப்படவுள்ளதாக அறியப்படுகிறது (இ-118)

உயிர் தப்பிய குழந்தைகள் கடற்படை ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஜூன் 24
கடந்த 11ஆம் திகதி திருகோணமலையில் இடம் பெற்ற பஸ் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்த இரண்டு குழந்தைகள் திருமலை கடற்படை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இக்குழந்தைகளில் ஒன்று பெண் குழந்தை. மற்றது ஆண் குழந்தை

திலக் என்ற ஆறு வயதுடைய குழந்தை மிகவும் அதிர்ச்சி அடைந்த நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இரண்டு குழந்தைகளையும் திருமலை கடற்படை அதிகாரிகள் கவனித்து வருகின்றனர். (இ-10)

தெல்லிப்பளையில் புற்று நோய் விடுதி

அன்பளிப்பு காணியில் அடிக்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 24
வடமாநாணப் புற்றுநோய்ச் சங்கம் புற்றுநோய் விடுதி கட்டுவதற்கு முயற்சி எடுத்ததை அடுத்து ஊரெழுவைச் சேர்ந்த திரு தம்பிராசா என்பவர் தெல்லிப்பளையில் 14 பரப்புக் காணியை இதற்காக நன்கொடையாக வழங்கி உள்ளார்.

இக்காணியில் கடந்த 12ஆம் திகதி காலை புற்றுநோய்ச் சங்கத்தின் உப தலைவர் திரு க. ஐயாத்துரை அத்திவாரக்கல்லை நட்டார்.

திரு. ஐயாத்துரை கடந்த 17 வருடமாக இச்சங்கத்திற்காக உழைத்து வந்தவர் என்பது குறிப்பிடத் தக்கது.

அடிக்கல் நடு வைபவத்தில் தம்பிராசா தம்பதியரும் அவர்களது உறவினர்களும் சங்கத்தலைவர் வைத்திய கலாநிதி ஜெகநாதன் சத்திரசிகிச்சைநிபுணர் கிருஷ்ண ராஜா, வைத்திய கலாநிதிகள் கதிரவேற்பிள்ளை, தெய்வேந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இவ் விடுதியை அமைத்து முடிப்பதற்கு 15 லட்சம் ரூபா வரையில் தேவைப்படுவதாகவும் இதற்கு பொதுமக்கள் உதவி வழங்குமாறும் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது (இ-10)

கல்வி

பாதுகாப்பான சூழலில் மாணிப்பாயில் கம்பியூட்டர் பயிற்சி (Computer Programming) வகுப்புக்கள் மிகவும் குறைந்த சலுகைக் கட்டணத்தில். ஆரம்பம் 27-6-1986 O/L படித்த அனைவரும் சேரலாம். தமிழ்மொழி பெயர்ப்பு வழங்கப்படும். நேரில் வரவும். Unikco Computer Centre, சுதுமலைச் சந்தி, 282, யாழ்ப்பாணம் ரோட், மாணிப்பாய்.

உடுதுறை மகாவித்தியாலய குறைகள் பற்றி தெரிவிப்பு

தாளையடி, ஜூன் 24
உடுதுறை மகாவித்தியாலய அபிவிருத்திச்சங்கப் பிரதிநிதிகள் குழு யாழ். கல்விப் பணிப்பாளர் திரு ஆர். சுந்தரலிங்கத்தை நேரில் சந்தித்து பாடசாலையில் உள்ள குறைபாடுகள் பற்றி முறையிட்டது.

அங்கு நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைத் பதிலாசிரியர்களை நியமிக்காமல் நடைபெறும் ஆசிரிய இடமாற்றங்கள் ஆகியவை பற்றி பிரதிநிதிகள் குழு கல்விப் பணிப்பாளரிடம் எடுத்துக் கூறியது.

நிரந்தர அதிபர் ஒருவரை நியமிக்காமல் தற்போது அங்குள்ள அதிபரை இடமாற்றம் செய்ய வேண்டாமெனவும் குழு கேட்டுக்கொண்டது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு வி எஸ். தியாகராஜா தலைமையில் நடந்த குழு கல்விப்பணிப் பாளரைச் சந்தித்தது. (இ-144)

விஜய குமாரணதுங்க இந்தியா போனது ஏன்?

அவரே பதில் சொல்கிறார்

கொழும்பு, ஜூன் 24
யுத்த நிறுத்தம் பற்றியோ, ஆயுதங்களை கீழே போடுவது பற்றியோ பேச நான் தமிழ்நாடு போகவில்லை அப்பாவி மக்கள் கொல்லப்படுவதை நிறுத்தும் நடவடிக்கைகளை எடுக்கும்படி கோரத்தான் செல்கிறேன்.

இலங்கை மக்கள் கட்சிச் செயலாளர் திரு. விஜய குமாரணதுங்க மேற்கண்டவாறு சொன்னார்.

திரு. விஜய குமாரணதுங்க, தனது மனைவி சந்திரிகா திரு ஒலிவர் அப்பாகுணசேகரா ஆகியோருடன் தமிழகம் சென்றார்.

ஞாயிறு சென்னையில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் பத்மநாபாவை சந்தித்துப் பேசினார். (உ-எ)

நாடகப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன்.23
வட்டுக்கோட்டை கலாநிலையம் வெள்ளி விழாவை யொட்டிய நாடகப் போட்டி ஒன்றை நடத்துகிறது

வட்டுக்கோட்டைத் தேர்தல் தொகுதி எல்லைக்குள் உள்ள மத்திய மகாவித்தியாலயங்கள் மகா வித்தியாலயங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் ஏனைய பொது நிறுவனங்கள், வெள்ளிவிழா போட்டியில் பங்கு பற்றலாம்.

தமிழ் திரையுலகுக்கு புதிய இயக்குனர் ராஜா

திரையுலகில் நீண்ட காலம் உதவி இயக்குனராக இருந்த ராஜா, இப்பொழுது இயக்குனர் அந்தஸ்தை அடைந்துள்ளார்.

அவர் சொல்கிறார்:

திரையுலகில் உதவி இயக்குனராக நான் அடியெடுத்து வைத்து பதினான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன.

என்னைப் பொறுத்தவரையில் எந்தத் தொழிலையும் முறைப்படி கற்று அனுபவரீதியாகச் செய்தால் தான் வெற்றிகாண முடியும் என்று எண்ணுபவன்.

ஓர் இயக்குனராக வேண்டியவர் தெரிந்து வைத்திருக்க வேண்டிய அத்தனை அம்சங்களையும் கற்றிருக்கிறேன். சினிமாக்காரர்களிடம் எப்படிப் பழக வேண்டும் என்பது முதற்கொண்டு என்று கூடச் சொல்லலாம்.

ஏற்கனவே பல தயாரிப்பாளர்கள் என்னை அணுகிப் படம் டைரக்ட் செய்யச் சொன்னார்கள்.

அப்போதெல்லாம் நான் ஒப்புக்கொண்டதில்லை

அதற்குக் காரணம் எனது தொழில் திறமைக்கு ஏற்ற நல்ல வாய்ப்பை நான் எதிர்நோக்கிக் கொண்டிருந்தால் தான்.

ஏவி. எம். சரவணன், எம் பாலசுப்பிரமணியம், எம் எஸ். குகன் ஆகியோர் எனக்கு அந்த அரிய வாய்ப்பைத் தந்துள்ளார்கள். நான் அவர்களுக்குப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்

'சங்கர் குரு' என்ற தலைப்பில் ஒரு தமிழ்ப் படம் எடுக்கலாம் என்றுதான் இருந்தோம். பிறகு அதைத் தெலுங்கிலும் தயாரிக்கலாம் என்று முடிவு செய்து—

இப்பொழுது தமிழிலும் தெலுங்கிலும் ஒரே சமயத்தில் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

அதனால் இருமொழிகளிலும் நான் அறிமுகமாகிறேன் இரண்டிலும் ஒரே சமயத்தில் படப்பிடிப்பு நடந்து கொண்டிருக்கிறது'' என்றார் ராஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
இன்மை - அஞ்சாமை - நடு நிலைமை
இல. 5 2ம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 24-06-86
தொலைபேசி 24805 22073 த. பெ. 73

உதய சங்கற்பம்

கடவுளைச் சரண் அடைந்தவன் தான் காப்பாற்றப்படுவான்.
அன்னை சாரதாதேவி

சீனித்தட்டுப்பாடு ஒருமுன் உதாரணமா?

கடந்த ஐந்தாறு நாட்களாக எல்லா வீடுகளிலும் சீனித் தட்டுப்பாடு என்ற கதைதான். தனியார் கடைகளில் சீனி கிடைக்கவில்லை. கிடைத்தாலும் அதிக விலை. அளவுக்கும் கட்டுப்பாடு

உண்மையாகவே சீனிக்குத் தட்டுப்பாடு இருந்ததா என்று அறிய முற்பட்டோம்

கொழும்பிலிருந்து சீனிக் கப்பல் வருவது தாமதப்பட்டுவிட்டது. அதனால் சீனி சந்தைக்குத் தொடர்ச்சியாக புழக்கத்துக்கு வருவதில் தடங்கல் ஏற்பட்டது.

எனினும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தாராளமாகச் சீனி வழங்கப்பட்டது. யாழ் மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. என் பற்குணம் கட்ந்த வியாழக்கிழமை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நேரில் விஜயம் செய்தார்.

அங்கெல்லாம் போதிய அளவு சீனி கையிருப்பில் இருந்ததாக அவர் கண்டறிந்தார்.

அவ்வாறாயின் சீனித் தட்டுப்பாடு ஏற்பட்டது போன்ற நிலைமை தோற்றுவிக்கப்பட்டதற்குக் காரணம் என்ன?

மூன்று மாதத்துக்குத் தேவையான அரிசி, மா, சீனியை இருப்பில் வைத்திரும்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுவது வழக்கம். அவ்வாறாயின் இம்முறை அது சரிவர நடைபெறவில்லையா என்ற கேள்வி எழுகிறது.

அடுத்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது கையிருப்பில் உள்ள சீனியை வாடிக்கையாளருக்குச் சரிவர விநியோகித்தார்களா என்ற கேள்வியும் எழுகிறது.

தனியார்துறையினருக்குச் சீனி விற்பதற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கையிருப்புக் குறைந்த காலத்தில் ப. நோ. கூ. சங்கங்கள் சீனி விநியோகத்தைத் தமதுகிளைக்கு மட்டுமே கட்டுப்படுத்துவதாகக் கூறுவதுண்டு?

அவ்வாறாயின் இம்முறை நடந்தது என்ன?

ப. நோ. கூ. சங்கங்களும் தனியார் துறையினரும் சேர்ந்து செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தினார்களா என்ற சந்தேகம் எழாமல் இருக்க முடியவில்லை.

யாழ்ப்பாணக் குடாநாடு இப்போது படும் அவலங்கள் போதாது என்று இப்படியும் ஒரு செயற்கைக் கஷ்டம் ஏன்?

இவ்வரக்கூடிய கஷ்ட காலங்களிலும் மக்கள் மீது இப்படித்தான் குதிரை விடப்படுமோ?

இவ்வாறான சமூக விரோதச் செயற்பாடுகளைத் தடுக்க எவருமே இருக்கமாட்டார்களோ?

சீனி விடயம் சின்ன விவகாரம்தான். ஆனால் அதனை முன்மாதிரியாகக் கொண்டு மக்களைப் பெருமளவில் பாதிக்கக்கூடிய செயல்கள் நடப்பின் நிலைமை என்னாகும்?

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாயினும் சரி, தனியார் வர்த்தகர்களாயினும் சரி, தமக்கு உள்ள பொறுப்பை உணர வேண்டும். தாமும் ஒரு ஸ்தாபன ரீதியாக இயங்கி மக்கள் நலனைப் பாதிக்கும் விடயங்களைத் தவிர்க்க உறுதிபூண வேண்டும்

எந்தப் பிரதேசத்தின் வளர்ச்சிக்கும் தனியார் துறையினர் பங்களிப்பு அவசியம். தனியார் துறையும், அரச துறையும் சம அளவாக வளர்ந்தால்தான் ஆரோக்கியமான பொருளாதாரச் சூழ்நிலை உருவாகும்

தனியார் துறையினர் அதனை மனதிற் கொள்ளாது. மக்கள் நலனை மதிக்காது அவர்களைச் சுரண்ட முயற்சித்தால் அரசாங்க ஏகபோகத்துக்கு இடம் ஏற்படும்.

தமிழ் மக்கள் இப்போது உள்ள சூழ்நிலையில் மக்கள் நலனுக்கு முதலிடம் கொடுக்க வேண்டிய பொறுப்பு அரச, தனியார் வர்த்தகர்களுக்கு உண்டு.

ஆகையால், அவர்கள் சமூகத்தின்பால் தமக்கு உள்ள பொறுப்பை உணர்ந்து நடப்பதே சிறப்பு.

மண்டைதீவுப் படுகொலை: சமாஜம் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூன். 24

மண்டைதீவுப் படுகொலையில் உயிரிழந்தவர்களுக்கு வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாஜம் அண்மையில் அஞ்சலிக் கூட்டம் ஒன்றை நடத்தியது.

உபதலைவர் திரு. அ. செல்ஸ்தியாம்பிள்ளை தலைமை வகித்தார்.

உயிரிழந்தவர்களின் ஆத்ம சாந்திக்காக ஆரம்பத்தில் மௌனஞ்சலி நிகழ்த்தப்பட்டது.

குருநகர் கடற்றொழிலாளர்கள் சமாசத்தின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் உழைப்பவர்கள். அவர்களுக்கு ஏற்பட்ட இந்த இழப்பினால் தொழிலாளர் வர்க்கமே ஆற்றத கவலை அடைகின்றது— இப்படித் தலைமையுரையில் திரு. செல்ஸ்தியாம்பிள்ளை சொன்னார்.

பொது முகாமையாளர் திரு. இ. இராஜாராம் கணக்காளர் திரு. ஐ. பொன்னம்பலம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (இ-எ)

பள்ளிவாசல் பரிபாலன சபை அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூன். 24

அருட் சகோதரர் மனுவெல் வென்செஸ்லாஸ் அவர்களின் அகால மரணம் கத்தோலிக்க மக்கள் மத்தியில் மட்டுமல்ல சகல இனத்தவர்கள் மத்தியிலும் அதிர்ச்சியையும் வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு யாழ் மாணிப்பாய் வீதி பெரிய முகியித்தீன் ஜும்மா பள்ளிவாசல் பரிபாலன சபை தெரிவித்துள்ளது. (இ-ஓ)

பம்பாயில் பெருமழை

3 மாடிக் கட்டடம் இடிந்து விழுந்தது

புதுடில்லி, ஜூன் 23

மகாராஷ்டிர மாநிலத்தின் தலைநகரான பம்பாயில் பெய்த பெரும் மழை காரணமாக மூன்று மாடிக் கட்டடம் ஒன்று இடிந்து விழுந்தது.

இதில் 67 பேர் இறந்ததாக முதலில் வந்த பிரிஐ செய்திகள் தெரிவித்தபோதிலும் இருவர் மட்டுமே இறந்ததாக கடைசியாகக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

கட்டடம் இடிந்து விழுந்தபோது கட்டடத்திற்குள் 125 பேர் வரை இருந்தனர் என்று கூறப்படுகிறது.

27 பேர் இடிபாடுகளுக்கிடையில் இருந்து காயங்களுடன் இழுத்து எடுக்கப்பட்டனர்

மீட்பு வேலைகளில் சிவில் பாதுகாப்பு அதிகாரிகளும் தீ அணைப்புப் படையினரும் ஈடுபட்டுள்ளனர்.

பருவமழை காரணமாக பம்பாய் பெரும் வெள்ளக் காடாகக் காட்சி அளிக்கிறது. (இ)

50 லட்சம் அகதிகள்

வாஷிங்டன், ஜூன் 23

ஆபிரிக்காவில் உள்ள 50 லட்சம் அகதிகளுக்கு சர்வதேச உதவிகள் மேலும் அதிக அளவில் தேவைப்படும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைச்செயலாளர் திரு. விரேஸ் கொய்லா கூறியுள்ளார்.

ஆபிரிக்க அகதி தினத்தையொட்டி அவர் விடுத்த செய்தியில் இவ்விதம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-ஓ)

பாக் குண்டு வெடிப்பு 20 பொலீஸ் காயம்

இஸ்லாமபாத், ஜூன் 23

பாகிஸ்தானின் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தின் மத்திய பகுதியில் உள்ள காவல் நிலையத்துக்கு வெளியே குண்டு வெடித்ததில் 20 பொலிஸார் காயமடைந்தனர்

அவர்களது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

அந்த மாகாணத்தில் சென்ற வாரமும் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நிகழ்ந்து 10 பேர் பலியானதுடன் பலர் காயமடைந்திருந்தனர். (இ-ஓ)

வெளி உலகில்

ஸ்பெயின் தேர்தலில் ஆளும் கட்சிக்கு மீண்டும் அறுதிப் பெரும்பான்மை

மாட்ரிட், ஜூன் 23

ஸ்பெயினில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஆளும் சோஷலிஸ்ட் கட்சி அறுதிப் பெரும்பான்மையை மீண்டும் பெற்றுள்ளது.

இதுவரை எண்ணப்பட்ட 69 வீத வாக்குகளில் பிரதமர் திரு ஜேர்லிஸ் கொன்ரோலின் சோஷலிஸ்ட் கட்சிக்கு 186 ஆசனங்கள் கிடைத்தன.

திரு. மனுவல் பராசா தலைமையிலான முக்கிய எதிர்க்கட்சியாகிய கன்சர்வேடிவ்கூட்டணியால் 91 ஆசனங்களை மட்டுமே கைப்பற்ற முடிந்தது.

மீண்டும் சோஷலிஸ்ட் கட்சி ஆட்சிக்கு வருவதை முன்னிட்டு தலைநகரான மாட்ரிட்டில் ஸ்பானிய மக்கள் குதூகலித்து ஆரவாரிப்பதாக ராய்டர் செய்தியாளர் தெரிவித்தார். (இ-ஓ)

தமிழ்நாட்டில் புற்றுநோய் ஒழிப்பு

சென்னை, ஜூன் 23

தமிழ்நாட்டில் புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டு பிடித்து அழிப்பதற்கு முக்கிய கவனம் எடுக்கப்படும்

இதனால் புதிய புற்றுநோய் தடுப்பு நிலையங்களை ஆரம்பிக்காது ஏற்கனவே இயங்கி வரும் நிலையங்கள் விஸ்தரிக்கப்படவுள்ளன. (இ-ஓ)

நடிகர் மரணம்

ஏதென்ஸ், ஜூன் 23

பிரெஞ்சு திரைப்படத்தின் பிரபலநகைச் சுவை நடிகரான மிக்கல் நொலுனி மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி அதே இடத்தில் மரணமானார்.

இவர் மோட்டார் சைக்கிளில் சாகஸம் செய்வதிலும் பிரபல்யம் பெற்றிருந்ததோடு, உலகராதனைகள் புத்தகத்திலும் இதற்காகத் தமதுபெயரைப் பொறித்திருந்தார். (இ-ஓ)

மனமுடைந்த நிலையில் கடாபி

திரிப்போலி ஜூன் 23

கடந்த ஏப்பிரல் மாதம் லிபியாவில் நடந்த அமெரிக்க விமானத் தாக்குதல்களால் கேர்னல் கடாபி மிகவும் மனமுடைந்துபோய் இருக்கிறார் என லிபியாவில் உள்ள அரேபிய—ஐரோப்பிய ராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டனர்

அமெரிக்கா மேற்கொண்ட இத்தாக்குதல்களால் கடாபியின் வளர்ப்பு மகள் பலியானதுடன் வசித்த வீடும் சேதமடைந்தது தெரிந்ததே

பொதுவைபவங்களிலோ அல்லது முக்கிய நிகழ்ச்சிகளிலோ பங்குபற்றுவதை கடாபி தவிர்த்து வருகிறார் என்று கூறப்படுகிறது. (இ-ஓ)

8,000 குழந்தைகள் எம். ஜி. ஆரிடம் கையளித்த மகஜர்

சென்னை, ஜூன் 23

தமிழ் நாட்டிலுள்ள 150 ஊர்களைச் சேர்ந்த எட்டாயிரத்திற்கும் அதிகமான குழந்தைகள் மகஜர் ஒன்றை மாநில முதல்வர் எம். ஜி. ராமச்சந்திரனிடம் கையளித்தனர்.

சிறுவருக்கான தமிழில் திரைப்படங்கள் இல்லாத குறையை நீக்குமாறும்— ஆங்கிலம், ஹிந்தி போன்ற மொழிகளில் வண்ணப் படங்களோடு வெளிவரும் புத்தகங்கள் போல் தமிழிலும் வெளிவர "குழந்தைகள் புத்தக நிறுவனம்" ஒன்றை அமைக்கும்படியும்— மகஜரில் கோரப்பட்டுள்ளது.

அத்துடன் சகல பாடசாலைகளிலும் பொது நூல்நிலையங்களிலும் சிறுவருக்கான பகுதி ஒன்றை ஏற்படுத்தி சிறுவர் அறிவு வளரவழி செய்யுமாறும் கேட்கப்பட்டுள்ளது

குழந்தை எழுத்தாளர் திரு அழ. வள்ளியப்பா இந்த மகஜருக்காக குழந்தைகளைச் சந்தித்து ஏற்பாடு செய்திருந்தார். — (இ-ஓ)

பஞ்சாப் விவகாரம்

எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு பூட்டாசிங் விளக்கினார்

புதுடில்லி, ஜூன் 23

சண்டிகாருக்குப் பதிலாக ஹரியானாவிற்கு மாற்றவேண்டிய பகுதிகள் குறித்து இப்பொழுது உள்ள நிலைபற்றி மத்திய உள்துறை அமைச்சர் திரு. பூட்டாசிங் எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு எடுத்துரைத்தார்.

மத்திய அரசு மேற்கொள்ளும் நிலையை எதிர்க்கட்சிகள் பொதுவாகப் பாராட்டியிருப்பதாகவும், அந்தப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வுகாண மனப்பூர்வமான முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று அவர்கள் கேட்டுக்கொண்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது (இ-ஓ)

இந்திய ஜப்பானிய ஏற்றுமதி

டோக்கியோ, ஜூன் 23

மூன்று ஆண்டுக்கால இடைவெளிக்குப் பின்னர் இந்தியாவும் ஜப்பானும் மீண்டும் வர்த்தகப் பேச்சுகளை தொடரவிருக்கின்றன

இந்தியா-ஜப்பானுக்கு இரும்புக் கனியம், கடல் உணவுப் பொருட்கள் போன்றவற்றை ஏற்றுமதி செய்யும் (இ-ஓ)

அல்ஜீரியாவும் கடனளியாகிறது

அல்ஜியர்ஸ் ஜூன் 23

அல்ஜீரிய நாட்டின் கடன் சுமை அதிகரிப்பதாக சர்வதேச அபிவிருத்திவங்கியின் அறிக்கை கூறுகின்றது

1983 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது அத்தொகை இப்பொழுது இரு மடங்காக அதிகரித்துள்ளது- (இ-ஓ)

செய்யாதிருமி



குறள்:
பிறன்பழி கூறுவான் தன்பழி புள்ளும்
திறன் தெரிந்து கூறப்படும்.

பொருள்:
மற்றவனைப் பற்றிப் புறங் கூறுகின்றவன், அவனுடைய பழிகள் பலவற்றிலும் நோகத் தக்கவை ஆராய்ந்து கூறிப் பிறரால் பழிக்கப் படுவான்

ஷெல் வெடித்த இடத்தில் கணவனும், மகளும் இரத்த வெள்ளத்தில் கிடந்தனர்

புன்னாலைக்கட்டுவன் சம்பவம் குறித்து சாட்சியம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

கரும்புகையைக் கக்கி வந்த 'ஷெல்' வெடித்த இடத்தைப் போய்ப் பார்த்தபொழுது எனது கணவரும் மூத்தமகளும் இரத்த வெள்ளத்தில் கிடந்தனர்.

நேற்று முன்தினம் புன்னாலைக்கட்டுவனில் "ஷெல்" தாக்கி மரணமான ஆறுமுகம் கனகரத்தினம் (45வயது) ஆறுமுகம் தயாநிதி (17வயது) ஆகியோரது மரண விசாரணைகள் நடைபெற்றன.

மரண விசாரணையில் சாட்சியமளித்த கனகரத்தினத்தின் மனைவி மேற்கண்டவாறு சொன்னார்.

மரண விசாரணையை யாழ்பதில் நீதிவான் அ. அன்ரனி நடத்தினார்.

சாட்சியமளித்தமனைவி மேலும் சொன்னதாவது,

காலை பத்து மணியளவில் வயாவிளான் இராணுவ முகாம் பக்கமாக வெடிச்சத்தங்கள் கேட்டுக்கொண்டிருந்தன.

இடையிடையே ஷெல் குண்டுகளும் வெடித்தன.

நண்பகல் ஒரு மணியளவில் எமது வீட்டிற்கு அருகாமையிலும் ஷெல்கள் விழுந்து வெடித்தன.

பயம் காரணமாக நான் அடுத்த வீடு "பிளாட்"டை நோக்கிச் சென்றேன் செல்வதற்கு முன் காலஞ்சென்றஎனது கணவனையும் மகளையும் "பிளாட்" உள்ள வீட்டுக்குப் போவோம் என அழைத்தேன்.

அவர்கள் எனது சொல்லைக் கேட்காமல் புகையிலைக் கொட்டில் பக்கமாக சென்றுகொண்டிருந்தனர்

அப்போது எமது புகையிலைக் கொட்டிலுக்கு அருகில் வெடித்துச் சத்தம் கேட்டது பெரிய புகைமண்டலமும் கிளம்பியது.

உடனே நான் ஓடிச் சென்றுபார்த்தபொழுது எனது கணவனின் இடுப்புப்பாகத்தில் சதைத் துண்டுகள் சிதறிக்கிடந்தன.

மகளின் கையிலும் இரண்டுவிரல்கள் சிதறிக் கிடந்தன

இருவரையும் சுற்றி இரத்தம் ஓடிக்கொண்டிருந்தது.

அவர்களை அவசர அவசரமாக ஆஸ்பத்திரிக்கு எடுத்து வந்தோம்

பின்னர் இருவரும் இறந்துவிட்டதாக அறிந்தோம்.

இப்படி அவர் சொன்னார். (இ-10)

துண்டிக்கப்பட்ட நிலையில் தீவுப்பகுதி மக்கள்

யாழ் அரச அதிபருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

தீவுப் பகுதிகள் அனைத்தும் யாழ் பிரதேசங்களில் இருந்து துண்டிக்கப்பட்டுள்ளன இதனால் தீவுப்பகுதி மக்கள் பெரும் துன்பத்திற்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். உணவுத் தட்டுப்பாடு ஒருபுறம் உள்ள வேளையில் அவசர சிகிச்சைக்காக மக்கள் ஆஸ்பத்திரி செல்ல முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது

இவ்வாறு கிராமிய (இருபிட்டி) ஐக்கிய சனசமூக நிலையத்தினர் யாழ் அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளனர்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

தீவுப்பகுதி மக்கள் கோட்டை இராணுவ முகாமைத் தாண்டி யாழ் நகருக்கு வரும்போது பல இன்னல்களுக்கு உள்ளாவதோடு தமது உயிரையும் இழக்க வேண்டிய நிர்க்கதி ஏற்பட்டுள்ளது

எனவே இதனைக்கருதி தீவில் கொண்டு தீவுப்பகுதி வாழ் மக்கள் முன்பு பயணம் செய்த அரசாலித் துறை ஊடாக இலகுவான பயணத்தைமேற்கொள்ள நிரந்தர பாலம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கைஎடுக்கவேண்டும்.

இப்படி அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

வாசகர் திருமகம்

நாவற்குழி வீடமைப்பு திட்டம்

"நாவற்குழியில் 298 வீடுகள் பொதுமக்களுக்கு விற்பனை" என்ற தலைப்பிட்டு தங்கள் பத்திரிகையில் 27-5-86 ஒரு செய்தி வந்திருந்தது மேலும் 6-6-86 திகதிக்கு முன் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டுமெனவும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது

வீடமைப்புச்சபை அதிகாரி மேலே குறிப்பிட்ட கால எல்லைக்குள் விண்ணப்பங்களை கோரியிருப்பது மிகவும் விநோதமாகவும் எதேச்சாதிகாரமானதாகவும் இருக்கிறது என்தை நான் குறிப்பிட விரும்புகிறேன்

விண்ணப்பங்களுக்கு தேவையான காலக்கெடு தற்போதைய சீர்கெட்ட தபால் போக்குவரத்து நிலைமையில் முற்றுமாகப் போதாது

மேற்படி வீடமைப்புத் திட்டத்தின் கீழ் அமைந்துள்ள வீடுகளுக்கு அண்மையில் இருக்கும் இராணுவ முகாமை அகற்றுவது சம்பந்தமான ஒரு விதவளக்கமும் இல்லை.

கட்டுக்காசாக விதித்துள்ள நிபந்தனைகள் மக்கள் துன்பமும் இக்காலக் கட்டத்தில் மிகவும் அதிகமாகத் தோன்றுகின்றன

இறுதியாக மேற்படி திட்டத்தின் கீழ் தங்கள் காணிகளை பறிகொடுத்து பல வருடகாலமாக பரிதவிக்கும் வட இலங்கை விடமைப்புச் சங்கத்தின் பழைய அங்கத்தவர்களுக்கும் ஒரே நிபந்தனையா?

கட்டுக்காசு சம்பந்தமாக அவர்களுக்கு சலுகை இல்லையா? அவர்களுக்கு எப்போது நஷ்டஈடு கிடைக்கும்.

வீடமைப்புச்சபை அதிகாரி இதற்குத் தகுந்த விளக்கம் கொடுக்க வேண்டும். கொடுப்பாரா?

பருத்தித்துறை, மு. நாகலிங்கம்

'நிலையக் குரல்'

யாழ்ப்பாணம், ஜூன். 24

திருமறைத் தொண்டும் சமய சமூகப் பணியாளருமாகிய ஆசிரியர் திரு. மு. கிருஷ்ணபிள்ளையின் பணிகளைப் பாராட்டி வழக்கம் பரை சனசமூக பஜனைச் சபையினர் 'நிலையக் குரல்' சிறப்பிதழ் ஒன்றை வெளியிட்டுள்ளனர். இது ஒரு இலவச வெளியீடு. (இ-எ)

மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம் ஜூன் 24

யாழ் நாவலர்மார்கட்டு பேய்ச்சி அம்மன் என வழங்கும் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் ஸ்ரீ மகா மேரு ஸ்ரீ சக்கர பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 26-6-86 வியாழக்கிழமை நடைபெறும்.

25-6-86 புதன்கிழமை மாலை 6 தொடக்கம் கிரியைகள் ஆரம்பமாகி விடும்.

இந்தப் பிரதிஷ்டைக்குரிய ஸ்ரீ சக்கரமானது இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது (இ 10)

சித்தன்கேணி ஆலய கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம் ஜூன் 24

சித்தன்கேணி ஸ்ரீமகா கணபதிப் பிள்ளையார் ஆலய கும்பாபிஷேகம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை 27 ஆம் திகதி 10 மணியளவில் நடைபெறவுள்ளது

26 ஆம் திகதி வியாழன் மாலை 4 மணிக்கு வாஸ்து சாந்திசமயகுப்பயாகசாலைப் பிரவேசம் ஆகியன நடைபெறும். (ஓ)

குண்டுவெடித்தாலும் நளாந்த வாழ்க்கை மாறக்கூடாது என்கிறார் அத்துலத்

கொழும்பு ஜூன் 24

குண்டுகள் அடிக்கடி வெடித்தாலும் நாளாந்த வாழ்க்கை வழமைபோல் நடைபெற வேண்டும்.

இப்படிச் சென்னை, தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி.

தாக்கிவிட்டு ஓடிவிடும் தந்திரத்தைதான் தீவிரவாதிகள் கடைப்பிடிக்கிறார்கள் குண்டுகள் வைக்கப்படுவது பற்றி அவர்கள் எச்சரிக்கை செய்வது இல்லை

குண்டுப்புரளி காரணமாக பாடசாலைகள், வங்கிகள், அரச அலுவலகங்கள் மூடப்படக் கூடாது.

வடஅயர்லாந்து, பிரான்ஸ், பிரிட்டன் இந்தியா ஆகிய நாடுகளிலும் குண்டுகள் வெடிக்கின்றன. அங்கு நாளாந்த வாழ்க்கை குழம்பியுள்ளதா?

இப்படிக் கேட்டார் அமைச்சர் அத்துலத் முதலி (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

London Pitman Institute Examinations

1. Type Writing
2. Short Hand
3. Book-Keeping & Accounts
4. English for Office Skill

பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்கவும் பாடங்களில் பயிற்சி பெறவும் தொடர்புகொள்ளுங்கள்.

St. Anthony's Institute of Commerce.
Pandatarippu.

உதயன்

24 — 06 — 1986 செவ்வாய்க்கிழமை

London IAB Examinations

1986 Decemberஇல் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள Book Keeping பரீட்சைகளுக்கு பதிவு செய்தவர்களும், அதன் பின்புள்ள பரீட்சைகளுக்குப் பதிவு செய்ய விரும்புவோரும் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

Director:
St. Anthony's Institute of Commerce.
Pandatarippu

ரூ. 14-50க்கு சீனி

தனியார் விற்க ஏற்பாடு

அதற்கேற்ற வகையில் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

தனியார் துறையினரும் சீனியை கிலோ 14 ரூபா 50 சதத்துக்கு — கட்டுப்பாட்டு விலையில் விற்கக்கூடிய வகையில் சீனி விநியோகத்தைச் செய்வது என்று யாழ் மாவட்டபல நோக்கக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் சமாஜம் தெரிவித்துள்ளது.

சமாஜத்தின் கூட்டம் ஒன்று நேற்றுக் காலை கூட்டுறவு அபிவிர்த்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்றது

யாழ் தேசியக் கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. சி. சிவமகராசா தலைமை வகித்தார்.

இக் கூட்டத்தில் தனியார் துறையினருக்கு சீனி விநியோகம் செய்வது பற்றி சங்கத் தலைவர்கள் ஆராய்ந்தனர்.

போக்குவரத்துச் செலவுகள் அதிகரித்துள்ளன. இந்த நெருக்கடியிலும் தனியார் துறையினரும் சீனியை கிலோ 14 ரூபா 50 சதத்துக்கு விற்கக் கூடியதாகவே சங்கங்கள் சீனி விநியோகம் செய்யும்.

இப்படிக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் உணவு விநியோகம், வங்கிச் சேவைகள், கூட்டுறவு இயக்கத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவு விழா ஆகிய விஷயங்கள் பற்றியும் ஆராயப்பட்டன.

இக் கூட்டத்தில் சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. கே. சண்முகலிங்கம், மக்கள் வங்கிப் பிராந்திய முகாமையாளர் திரு. கே. கணேசரத்நரம், உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. என். பற்ருணம் ஆகியோரும் பங்கு பற்றினர். (உ-எ-5)

பாதிக்கப்பட்டோருக்கு

தென்இந்தியதிருச்சபை யாழ்ஆதீனம்நிதியுதவி

யாழ்ப்பாணம், ஜூன் 24

அண்மையில் ஏற்பட்ட வன்செயல்களினால் வல்வெட்டித்துறை, மண்டைதீவு ஆகிய இடங்களில் இருந்து இடம்பெயர்ந்த அகதிகளுக்கு உதவ தென் இந்தியத் திருச்சபை யாழ் ஆதீனம் 1 லட்சத்து 65 ஆயிரம் ரூபாவை வழங்கியது.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஆயிரம் குடும்பங்களுக்கும் மண்டைதீவைச் சேர்ந்த 650 குடும்பங்களுக்கும் இத் தொகை யாழ் அரச அதிபரினால் பகிர்ந்தளிக்கப்படும்.

இதைத் தவிர மண்டைதீவு டெலிகொலேயில் உயிரிழந்த 31 குடும்பங்களுக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் 31 ஆயிரம் ரூபாவை தென் இந்தியத் திருச்சபை யாழ் ஆதீனம் வழங்கியுள்ளது. (உ-எ)

தொலைத் தொடர்பு திணைக்கள பிரிவுகள் பருத்தித்துறை வீதியில்

யாழ்ப்பாணம், ஜூன்.24

யாழ் பிராந்திய தொலைத் தொடர்புத் திணைக்களத்தின் சில பிரிவுகள் தற்காலிகமாக பருத்தித்துறை வீதியில் ஆரியகுளத்துக்கு அருகில் உள்ள கட்டடம் ஒன்றில் இயங்கத் தொடங்கியுள்ளன.

தொலைபேசிக் கட்டணங்கள் செலுத்தும் பிரிவு, தொலைபேசிப் பழுது பற்றித் தொடர்பு கொள்ளும் பிரிவு ஆகியனவே தற்காலிகமாக அலுவலகத்தில் இயங்கும். தந்தித் தொடர்பு திணைக்கள மாவியர்களும் இத்தற்காலிக அலுவலகத்தில் தான் கடமைக்குச் சமுகமளிப்பர்.

இப்படித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன (உ-எ-6)

நாவற்குழியில்

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவருகிறது.

முகாமுக்குத் திரும்பிய சிப்பாய்கள்அங்கு கூட்டமாகநின்ற ஓர் இடத்தை நோக்கி ஈ.பி.ஆர்.எல்.எவ், இயக்கப் போராளிகள் ஷெல் தாக்குதலை நடத்தினர்கள்

இந்த மோதலின் போதும் பல சிப்பாய்கள் பலியாகியதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். போராளி ஒருவரும் இந்த மோதலில் வீரமரணம் அடைந்தார்.

இதன் பின்னர் முகாமிலிருந்து நாவற்குழி, கைதடி பகுதிகளை நோக்கி 'ஷெல்' தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

நாவற்குழி மில் ஒன்றிற்கு அருகில் நெல் இறக்கிக் கொண்டிருந்த வேலணையைச் சேர்ந்த சின்னத்தம்பி பரமேஸ்வரன் (33 வயது) என்பவர் ஷெல் தாக்குதல்களினால் தலையில் படுகாயம் அடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு உள்ளார்.

ஷெல் குண்டுகளினால் சில வீடுகளும் சேதமடைந்ததாகத் தெரியவருகிறது (உ-10-74)

அறிவித்தல்

அனலைதீவு ஸ்ரீ எழுமங்கை நாச்சிமார் கோவில் வழிபடுநர் சபை உறுப்பினர்களாக பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

போஷகர் :— திரு. க. சிவனடியான் J. P. அவர்கள்
தலைவர் :— ,, மு குமாரசாமி (இணைக்க சபை உறுப்பினர்)
உப தலைவர் :— ,, க. ஆறுமுகம் அவர்கள்
செயலாளர் :— ,, வ. பரமசோதி (இணைக்க சபைச் செயலாளர்)
பொருளாளர் :— ,, பே. கணபதிப்பிள்ளை (ஆசிரியர்)
ஏனையஉறுப்பினர் :— திரு. வை பூலோகசுந்தரம்
,, பொ. சிவபாலன்
,, க. விசுவநாதி
,, த. மாணிக்கவாசகர்
,, வ. சதாசிவம்
,, மு சச்சிதானந்தன்
,, வே கணேசன்
இங்ஙனம்
வ. பரமசோதி
கௌரவ செயலாளர்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் அச்சாபனத்தாரால், அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 24—06—1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15, Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka, under number Q J 60 N 86

திருகோணமலையில் மினி முகாம் வருமா?

திருகோணமலை, ஜூன் 24

திருகோணமலை நகரில் ஆயுதப்படையினரின் மினி முகாம் ஒன்று நிறுவப்படலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

நகரில் உள்ள படமாளிகைகள், பாடசாலைகள் முதலியவற்றில் உள்ள தண்ணீர், இடவசதிகள் பற்றிய விவரங்களை திருகோணமலை அரசாங்க அதிபர் சேகரித்துள்ளார்.

அரசாங்க அதிபரின் பணிப்புரையைத் தொடர்ந்து, பிரதேச உதவி அரசாங்க அதிபர் இது சம்பந்தமான விவரங்களைச்சேகரித்து அரச அதிபருக்கு வழங்கியுள்ளார்.

அரசு வட்டாரங்களின் படி, இப் பாடசாலைகள், படமாளிகைகள் ஆகியவற்றில் ஒன்று ஆயுதப் படையினரின் மினி முகாம் அமைக்கப் பயன் படுத்தப்படலாம் என்று தெரியவருகின்றது. (அ-எ-150)

நிபந்தனை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திற்காகவும், சுதந்திர இருப்பிற்காகவும் வெற்றி வரை போராடுவது எமது இலக்கு. இதனை மிகவும் உறுதியுடன் நாம் பிரகடனப் படுத்துகிறோம். இப்படித் திரு பாலகுமார் சொன்னார். (அ-எ)

சடலம் கரை ஒதுங்கியது

வேலணை, ஜூன் 24

நயினாதீவு தெற்கு கடற்கரையில் அம்பாள் தீர்த்தம் எடுக்கும் இடத்தில் தலையும் ஒரு காலும் இல்லாத நிலையில் இனம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் ஒன்று ஒதுங்கியது. (உ)

...ருமலையில் இன்று ...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளார்.

செய்தியாளர்களும் மாநாட்டிற்கு அழைக்கப்பட்டுள்ளனர்

திருகோணமலைப் பகுதியில் ஏட்டிக்குப் போட்டியாக இடம் பெற்று வரும் வன்செயல்களைத் தொடர்ந்து பஸ்களிலும் ரயில்களிலும் பயணம் செய்த பலர் காணாமற் போனதாக திருமலை பிரஜைகள் குழு, அரச அதிபருக்கு மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்திருந்தது

இச்சம்பவங்கள் மேலும் இடம்பெறாது இருக்க நடவடிக்கை எடுக்கும்படி பிரஜைகள் குழு, அரச அதிபரை மகஜர் மூலம் கேட்டு இருந்தது

இதனைத் தொடர்ந்தே அரச அதிபர் இந்த மாநாட்டை இன்று கூட்டியிருக்கிறார்.

பிரஜைகள் குழுவின் இணைச் செயலாளர்கள் வண. பிதா பீட்டர் குருகுல ஆராச்சி, திருமதி சுபாஷினி வரதன் இந்த மகஜரைச் சமர்ப்பித்தனர்.

மகஜரில் கூறப்பட்டுள்ளதாவது;-

செல்வநாயகபுரம் பகுதியில் 10 தமிழர் கொல்லப்பட்டனர்.

அதைத் தொடர்ந்து ஆண்டாங்குளம் பகுதியில் 17 சிங்களவர் கொல்லப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து பல தமிழர் காணாமற் போய்விட்டனர். இவர்கள் பஸ்களிலும் ரயிலிலும் பயணம் செய்கையிலேயே காணாமற்போய் விட்டனர்.

இப்படி மகஜரில் கூறப்பட்டது

தமிழர் சடலங்கள்

4-6-86 இல் ஆண்டான் குளம் சம்பவத்தின் பின்னர் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் பல தமிழர்களில் சிலரின் சடலங்களே கண்டுபிடிக்கப்பட்டன

பின்வருவோரின் சடலங்களும் கண்டுபிடிக்கப்பட்டன!

1. கந்தனாயில் நெல் வியாபாரியான கே. இராஜகோபால் (35) ஊர்காவல் படையினரால் சுட்டுக்கொல் கொல்லப்பட்டார்.
2. அன்புவழிபுரத்தில் கே சண்முகநாதன் (35 வயது) சுட்டுக் கொல்லப்பட்டார்.
3. இன்னொரு தமிழரின் சடலம் வெட்டுக்காயங்களுடன் மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டது. பின்னர் அடையாளங் காணப் படாமலேயே சடலம் அடக்கம் செய்யப்பட்டது.

4 ஆம் கட்டையில் குண்டர்களினால் கடத்தப்பட்ட சில தமிழர்கள் சிங்களவர் சிலரின் உதவியுடன் தப்பியும் வந்துள்ளதாகச் செய்திகள் வந்துள்ளன -என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-150)

இன்று தேர் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 24

இருபாலை அருள்மிகு கற்பக விநாயகர் ஆலய இரதோற்சவம் இன்று காலை நடைபெறும்

கடந்த பத்தாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய வருடாந்த மகோற்சவம் நாளை நடைபெறும் தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறும். (உ-10)

2 சடலங்கள்

(1 ம்பக்கத் தொடர்ச்சி)

எரிக்கப்பட்டன.

இந்தச் சடலங்கள் எப்படி எங்கிருந்து வந்து சேர்ந்தன என்பது பற்றிய விபரம் இன்னமும் கிடைக்கவில்லை. (உ-10)

யாழ்நகரிலிருந்து அனுராதபுரத்திற்கு கடுகதி பஸ் சேவை

தினமும் காலை 6 மணிக்கு

யாழ்ப்பாணம், ஜூன். 24

யாழ்ப்பாணத்தில் இருந்து அனுராதபுரத்துக்கு கடுகதி பஸ் சேவை ஒன்றை வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் டிப்போ ஆரம்பித்துள்ளது.

பரீட்சார்த்தமாக நேற்றுக்காலை 6 மணிக்கு பஸ் ஒன்று முல்லைத்தீவு வழியாக அனுராதபுரம் சென்றது.

இந்த பஸ்ஸில் சுமார் 40 பயணிகள் வரையில் சென்றனர்.

இச்சேவை இனித் தொடர்ந்து நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

அனுராதபுரத்தில் இருந்து பிற்பகல் 4 மணியளவில் கொழும்பு செல்லும் ரயிலைப் பிடிக்கக் கூடிய முறையில் தான் இந்த பஸ் சேவை நடைபெறுகின்றது.

சாவகச்சேரி, கொடிகாமம், பரந்தன், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய இடங்களில் மட்டுமே பஸ் தரிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

ஈ. பி. ஆர். எல். எவ்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப்படை வீரர்கள் மோட்டார் ஷெல் தாக்குதல் நடத்தினர்.

இதனால் தாக்குப் பிடிக்க முடியாத சிப்பாய்கள் முகாமிற்குத் திரும்பிய பின் ஷெல் தாக்குதலை நடத்தினர்

மேலும் தொடர்ந்து அவர்கள் துரத்திச் சென்ற மக்கள் விடுதலைப் படைப் போராளிகள் நாவற்குழி முகாமிற்கு மிக அண்மையில் நிலை கொண்டு மோட்டார் தாக்குதலை நடத்தினர்.

இத் தாக்குதலின் போது பத்துக்கும் மேற்பட்ட சிப்பாய்கள் இறந்ததாக தகவல் கிடைத்துள்ளது.

கொல்லப்பட்டவர்களின்சடலங்கள் ஹெலிக் கொப்டர்மூலம் கொழும்புக்கு அனுப்பப்பட்டன.

இத்தாக்குதலின் போது முகிய பங்குவகித்த மக்கள் விடுதலைப்படை வீரரான தோழர் ரஞ்சன் (சி. கணேசதாஸ், மட்டுவில்) ஈழ மக்களுக்காக போராடி வீர மரணமடைந்தார்.

கௌரவப் பிரஜையாக கனத்திலேமரித்த எங்கள் தோழனுக்கு வீர வணக்கத்தை செலுத்துவோம்.

[illegible] தொர்க்கப்பட்டிருந்த [illegible] (உ-10)

விளையாட்டரங்கு

பற்றிக்ஸ் அணிக்கு தொடர்ந்து மூன்றுவது வெற்றி!

61,31ஓட்டங்களில் ஸ்கந்தா சுருண்டது

—அலுவலக விளையாட்டுச் செய்தியாளர்—

யாழ்ப்பாணம், ஜூன் 24

சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி அணிக்கு எதிரான 17 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி இன்னிங்ஸில் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயா அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 61 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

சி. ஆர் ஜெயவேந்திரா 8 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் ஆர். பி. சவுந்தரநாயகம் 14 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சென் பற்றிக்ஸ் அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றபோது ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

ஏ. எம். நிர்மல்ராஜ், ஆர். பி சவுந்தரநாயகம் ஆகியோர் முறையே 38, 30 ஓட்டங்களைப் பெற்றனர்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்ப்பதற்கு 82 ஓட்டங்களைப் பெற வேண்டிய நிலையில் ஸ்கந்தவரோதயா அணி இரண்டாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடியது

இந்த அணி பற்றிக்ஸ் அணியின் பந்து வீச்சாளர்களுக்கு சடுகொடுக்க முடியாமல் திண்டாடி 31 ஓட்டங்களுக்கு தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

ஏ. எம். நிர்மல்ராஜ் சி. ஆர். ஜெயவேந்திரா ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் வி. ஆர். திலக்ராஜ் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

சென் ஜோன்ஸ் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிகளை ஏற்கெனவே நடந்த போட்டிகளில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி தோற்கடித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (உ-7)

உலகக் கிண்ணம்

போக்லாந்து யுத்த வீரர்கள் உதைபந்தாட்டத்தில் கோட்டை

பெல்ஜியமும் அரை இறுதிக்குத் தெரி...

மெக்ஸிக்கோ, ஜூன் 23

மெக்ஸிக்கோவில் நடைபெற்றுவரும் உலகக்கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்திற்கு ஆர்ஜென்ரீனாவும் பெல்ஜியமும் தகுதி பெற்றன.

போக்லாந்து யுத்தத்தில் ஆர்ஜென்ரீனாவை வென்ற இங்கிலாந்து, உலகக்கிண்ண கால் இறுதி ஆட்டத்தில் ஆர்ஜென்ரீன அணியிடம் 2-1 என்ற கோல்கணக்கில் தோல்வியடைந்தது.

மற்றைய கால் இறுதி யாட்டத்தில் - பெனல்டி உதைகளின் முடிவில்- பெல்ஜியம் ஸ்பெயினை 5-4 என்ற அடிப்படையில் தோற்கடித்தது.

பெனல்டி உதைகளுக்கு முன்னர் ஆட்ட முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோல் போட்டன.

மேற்கு ஜேர்மனியும், பிரான்ஸும் ஏற்கனவே அரையிறுதி ஆட்டங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டுவிட்டன என்பது தெரிந்ததே.

நாளை புதன்கிழமை அரை இறுதிப் போட்டிகளில் பெல்ஜியம் அணி ஆர்ஜென்ரீனாவையும் பிரான்ஸ் அணி மேற்கு ஜேர்மனியையும் எதிர்த்து ஆடும். (உ-9)

2ஆவது டெஸ்ட்

இந்தியா பெருவெற்றி!

இங்கிலாந்து அணி மண் கவ்வியது

லீட்ஸ், ஜூன் 23

இங்கிலாந்தில் லீட்ஸில் நடைபெற்ற இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டத்தில் இந்தியா விடம் இங்கிலாந்து மீண்டும் படுதோல்வியடைந்தது.

இதனால் மூன்று டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட இந்தத் தொடரில் இந்தியா வெற்றிவாகை சூடியிருக்கிறது

ஏற்கனவே லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற முதலாவது டெஸ்டில் இங்கிலாந்து படுதோல்வியடைந்தது. இதனால் இங்கிலாந்து அணித்தலைவர் டேவிட் கவர் தமது பதவியை பறிகொடுத்தார்.

மைக் கட்டிங் தலைமையில் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடிய இங்கிலாந்து அணி அந்த ஆட்டத்தில் 279 ஓட்டங்களினால் படுதோல்வியடைந்தது.

இந்த ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸில் இந்தியா 271 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 237 ஓட்டங்களையும் பெற்றது.

இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 102 ஓட்டங்களில் சுருண்டது. இரண்டாவது இன்னிங்ஸில் 128 ஓட்டங்களை மட்டும் பெற்ற நிலையில் சகல விக்கெட்டுகளையும் கோட்டைவிட்டு ஆட்டத்தில் தோல்வியுற்றது

இரண்டாவது இன்னிங்ஸில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி ஆட்டமிழக்காமல் 103 ஓட்டங்களைப் பெற்ற இந்திய வீரர் துலீப் வெங்சர்கார் ஆட்டத்தின் சிறப்பு வீரராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த ஆட்டத்தில் கிடைத்த தோல்வி இங்கிலாந்து அணிக்கு அடுத்தடுத்துக் கிடைத்த ஏழாவது டெஸ்ட் தோல்வியாகும். (உ)

காங்கிரஸ் பங்குபற்ற - - -

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முரணானதாகவும் இந்த முடிவு அமைந்துள்ளது.

தயவு செய்து சர்வ கட்சி மாநாட்டில் கலந்து கொள்ளாதீர்கள்.

--- இப்படி திரு. குமார் பொன்னம்பலத்துக்கு அனுப்பிய தந்தியில் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. கனகநாயகம் பத்திரிகை அறிக்கை ஒன்றையும் விடுத்திருக்கிறார்.

அவர் அறிக்கையில் கூறியிருப்பதாவது;

ஜனாதிபதி ஜெயவர்த்தனா கூட்டியுள்ள சர்வ கட்சி மாநாட்டில் கலந்து கொள்வதாகத் தமிழ்க் காங்கிரஸ் அறிவித்திருப்பது எனக்கு ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் தந்துள்ளது.

கட்சியின் அங்கத்தவர்களைக் கலந்தாலோசிக்காமலும் அவர்களின் அனுமதியைப் பெறாமலும் தன்னிச்சையாக காங்கிரஸின் கொழும்புக் கிளைத் தலைவர் திரு. குமார் பொன்னம்பலம் இப்படி முடிவு எடுத்தது பிழையான நடவடிக்கை. கவலைக்குரிய விஷயம்.

கடந்த சில மாதங்களாக அரசாங்கத்தின் மூப்படையினர் தமிழ் மக்களைக் கொன்று சித்திரவதை செய்தும் அவர்களின் உடைமைகளுக்குச் சேதம் விளைத்து வருவதும் தெரிந்ததே.

இது விடயமாக ஜனாதிபதிக்கு முறைப்பாடு செய்யப்பட்டது. எதுவித நிவாரணமும் வழங்காமல் தொடர்ந்து இக் கொடூர சம்பவங்களை அனுமதிக்கும் ஜனாதிபதி கூட்டும் சர்வகட்சி மாநாட்டில் பங்குபற்றுவது ஒரு சமூக விரோதச் செயல் என்று கருதுகின்றோம்.

எனவே இம்மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டாம் என்று திரு. குமார் பொன்னம்பலத்தைத் தந்தி மூலம் கேட்டுள்ளேன்.

— இப்படி திரு. கனகநாயகம் தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார். (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org